**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 15/2023**

**2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் தேதி வெள்ளிக்கிழமை**

வா.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி இளநிலை உதவியாளர் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் கண்ணன் | தபெ/கபெ |
| ஊர் | வட்டம் |
| சாதி | சமயம் |
| வயது | தொழில் |

**முதல்விசாரணை:-**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பில் 1வது சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு கையெழுத்திட்டேன். அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். கடந்த 27.04.2006 தேதிய ஈடுகடன் ஆவணம் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியிடு செய்யப்படுகின்றது. கடந்த 15.02.2008 தேதிய பவர் பத்திரம் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியிடு செய்யப்படுகின்றது. கடந்த 21.01.2008 தேதிய தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியிடு செய்யப்படுகின்றது. கடந்த 14.03.2019 தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியிடு செய்யப்படுகின்றது. கநட்த 16.03.2019 தேதிய திருப்பப்பட்ட அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியிடு செய்யப்படுகின்றது. வில்லங்க சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியிடு செய்யப்படுகின்றது. பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை: இல்லை**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**